செ.வெ.எண் :05 நாள் : 03.07.2017

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12(1) (சி) ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப்பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கான சேர்க்கை இணைய வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சேர்க்கைக்கான குழந்தைகளைத் தெரிவு செய்யும் பணி 31.05.2017 அன்று அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெற்றது. மேலும், 31.05.2017 அன்று மேற்கொள்ளப்பட்ட சேர்க்கை நடைமுறைகளுக்குப் பிறகு காலியாக இருந்த இடங்களுக்கு 20.06.2017 அன்று நேரடிச் சேர்க்கை/குலுக்கல் முறை மூலம் சேர்க்கை வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு சேர்க்கை நடைமுறைகள் முடிவுற்ற பின்னரும், கரூர் மாவட்டத்திலுள்ள சில பள்ளிகளில் 25% இட ஒதுக்கீட்டின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் காலியாக உள்ளன. எனவே, நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன்பெறும் நோக்கிலும், இரண்டாம் கட்டமாக 03.07.2017 முதல் 25.07.2017 வரை இணைய வழியாக விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் முழுமையாக நிரப்பப்படாமல் காலியாக உள்ள இடங்களுக்கு சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் கீழ் குறிப்பிட்ட இடங்களில் விண்ணபிக்க தெரிவிக்கப்படுகிறது.

- முதன்மைக்கல்வி அலுவலகம், கரூர்.
- மாவட்டக்கல்வி அலுவலகம், கரூர்.
- மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலகம், கரூர்.
- அனைவருக்கும் கல்வி இயக்க அலுவலகம், கரூர்
- கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து இ–சேவை மையங்கள்.
- கரூர், தாந்தோணி, அரவக்குறிச்சி, க.பரமத்தி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, தோகைமலை, கடவூர் ஆகிய ஒன்றியங்களில் அமைந்துள்ள உதவித் தொடக்கக்கல்வி அலுவலகங்கள்.

இத்திட்டத்தின் கீழ் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்களின் பெற்றோர்கள்,

- கடவூச் சீட்டு அளவுள்ள நிழற்படம், பிறப்புச் சான்றிதழ்(அசல்)
- ஜாதிச் சான்றிதழ்(அசல்)
- நலிவடைந்த பிரிவினரில் இதர வகுப்பினரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000க்குள் இருப்பின் அவர்களின் வருமானச் சான்று.
- வருவாய்த் துறையினரால் அளிக்கப்பட்டுள்ள இருப்பிடச் சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை இவற்றுள் ஏதேனும் ஒன்றின் அசல்

ஆகியவற்றுடன் மேற்காண் மையங்களை அணுகி விண்ணப்பங்களை இனையதளம் வழியாக தரவேற்றம் செய்து, ஒப்புகை சீட்டினை பெற்றுக் கொள்ளலாம் என்று கரூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.